

# நரசிம்மன் பதில்கள்

உங்கள் கேள்விகளை கேட்பதற்கு
**MAISON DES MEDIAS** 22, Rue Perdonnet, 75010 Paris, France
narasimmanpathilkal@gmail.com

*தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நிருபமராவைச் சந்தித்தபோது, அவரின் விருப்பப்படி மீள் குடியேற்றம் பற்றித்தான் பேசினார்களா?*

**கே.சிறீ – பிரித்தானியா**

அவர்கள் என்ன பேசி இருந்தாலும் மீள் குடியேற்றம் பற்றி பேசியது மட்டுமே வெளியே அறிவிக்கப்பட்டது. இச் சந்திப்பு குறித்து தெரிவித்த ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் திருமலை, சம்பூர், மூதூர் மக்களை அவர்களின் சொந்த இடங்களுக்கு அண்மையிலேயே குடியமர்த்த வேண்டும் என தாம் கேட்டதாக கூறியுள்ளார். இது தமிழர் தாயகத்தை சிங்களம் காவு கொள்வதற்கு துணைபோவதாக உள்ளது. இந்தியா சொன்னதைத்தானே இவர்கள் சொல்ல வேண்டும்.

## கொழும்பு சென்ற இந்திய இராணுவத் தளபதிக்கு சங்கு, பறை முழங்க செங்கம்பள வரவேற்பு வழங்கப்பட்டுள்ளதே?



*‘இலங்கை - இந்திய உடன்படிக்கை ஏற்பட்டதில் முக்கிய பங்கு விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் உண்டென்பதை நான் முரண்பாடுகளுக்கு அப்பால் ஏற்றுக் கொள்கிறேன்’ என மகிந்தவின் ஆணைக்குழுவின் முன்னால் சிறீலங்கா அமைச்சர் டக்ளஸ் கூறியுள்ளாரே?*

**தொல்லூர் நாகன் – பிரான்ஸ்**

விடுதலைப் புலிகள் இல்லாமல் போனது குறித்து தனக்கு நெருங்கியவர்களிடம் ஆதங்கப்படுகிறாராம் டக்ளஸ். புலிகள் இருக்கேக்கை தனக்கு மாலையும், மரியாதை கொடுத்தவர்கள், இப்போது தனக்கு எந்தவித மரியாதையும் கொடுக்கின்றார்கள் இல்லை என்று வருத்தப்பட்டிருக்கிறார். டக்ளஸ் மரியாதையோடு வாழுறதுக்கும் விடுதலைப் புலிகள் தேவையாக இருக்கின்றார்கள். மனக்கிடையில் இருந்த அந்த வலிதான் இவ்வாறு வார்த்தையாக வந்து விழுந்ததோ. அல்லது, நா தடுக்கி உண்மை வெளியே வந்துவிழுந்துவிட்டதோ தெரியவில்லை. ஆனால், இதற்காக தனது எஜமானரிடம் டக்ளஸ் வாங்கிக் கட்டியிருப்பார் என்பதுமட்டும் வெளிவராத உண்மையாக இருக்கும். தமிழீழத் தேசியத் தலைவரால் முன்னெடுக்கப்பட்ட விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்கு கடுமையாக உழைத்த டக்ளசுக்கே இந்த நிலை என்றால், இன்று புதிதாக சென்று ஒட்டிக் கொண்டுள்ள ஒட்டுண்ணிகளின் நிலை நாளை என்னவாக மாறும் என்று நினைக்கத்தான் பரிதாபகரமாக இருக்கிறது.

*கொழும்பு சென்ற இந்திய இராணுவத் தளபதிக்கு சங்கு, பறை முழங்க செங்கம்பள வரவேற்பு வழங்கப் பட்டுள்ளதே?*

**எஸ்.ஆர்.கரன் – பரிஸ்**

முன்பு பாகிஸ்தானின் இராணுவத் தளபதியாக இருந்த முஷாரப் சிறீலங்காவிற்கு சென்று திரும்பிய பின்பே பாகிஸ்தானில் இராணுவப் புரட்சி மூலம் ஆட்சியை கைப்பற்றி சிறீலங்காவின் உற்ற நண்பராக மாறினார். அவ்விதமே இந்திய இராணுவத் தளபதியும் தங்களுக்கு நண்பராக இருப்பதற்கு இவ்விதம் வரவேற்பு வழங்கியிருக்கலாம். ஆனால் எனக்கென்னவோ இது எச்சரிக்கைமாதிரித்தான் படுகுது. 1987ல் ஒப்பந்தம் போட வந்த ராஜீவுக்கு சங்கு ஊத வெளிக்கிட்டு, அவர் மயிரிழையிலை உயிர்தப்பினவர். இவருக்கு சங்கோடை விட்டுவிட்டார்களோ என்னவோ..?

*நிறைவேற்று ஜனாதிபதிமுறையை முன்பு எதிர்த்த விமல் வீரவன்சா தற்பொழுது மகிந்த தொடர்ந்து ஜனாதிபதியாக இருப்பதற்கு ஆதரவு தெரிவித்துள்ளார். ஏன் இந்த முரண்?*

**வி.கதர் – பிரித்தானியா**

எல்லாம் பதவிக்காகத்தான். முன்பு சிவப்புத் தோல் போர்த்திருந்தவர், இப்போது இனவாதத் தோலைப் போர்த்திருக்கின்றார். ஆனால், மகிந்த எதிர்பார்த்தது மூன்றில் இரண்டு பெரும்பான்மை. ஆனால் தற்பொழுது அதைவிட அதிகமான ஆதரவுடன் உள்ளார். 1977 தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி பெற்ற வெற்றி ஜே.ஆர் சர்வதிகார சட்டங்களை வகுக்க வழி அமைத்தது. இன்று அதே சர்வதிகார சட்டம் ஐக்கிய தேசியக் கட்சியின் இருப்பையே கேள்விக்குறியாக்கி உள்ளது.

*தமிழ் நாட்டில் கைது செய்யப்பட்டுள்ள தமிழ் உணர்வாளர் சீமான் எப்பொழுது விடுதலையாவர்?*

**ஆர்.செல்வகுமார் – பிரான்ஸ்**

சிறீலங்காப் கடற்படையால் தமிழக மீனவர் கொலை செய்யப்பட்தை கண்டித்து, சிறீலங்கா அரசுக்கு எதிரக பேசியதற்காகவே தமிழக அரசால் சீமான் கைது செய்யப்பட்டார். அவர் விடுதலையாகாத வகையில் அவர்மீது கடுமையான சட்டம் பாய்ந்துள்ளது. ஈழத் தமிழரின் உரிமைக்காக குரல் கொடுத்து தமிழக முதல்வர் கலைஞரின் உண்மை முகத்தை அம்பலப் படுத்தியதும் தமிழக அரசு இவர் மீது இவ்விதமான சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு முக்கிய காரணமாகும். திரு சீமான் வெளியில் இருந்தால் அடுத்த வருடம் நடக்க உள்ள தமிழக சட்டசபைத் தேர்தலில் மக்களின் உணர்வை தட்டி எழுப்பிவிடுவார் என்ற தமிழக முதல்வரின் அச்சமும் இந்த சிறை வைப்புக்கான காரணம் என குற்றம்சாட்டுகின்றார்கள். எனவே, தேர்தல் பிரச்சாரம் முடியும் வரையாவுதல் சீமான் சிறைக் கம்பிகளுக்கு பின்னால் இருந்துதான் ஆக வேண்டும்போல..?

# மறக்க முடியுமா..?



## வந்தாறுமூலை இனப்படுகொலையின் 20வது ஆண்டு நிறைவு

*1990ம் ஆண்டு செப்டெம்பர் 5ம் திகதி கிழக்கு பல்கலைக்கழக அகதி முகாமில் தங்கியிருந்தவேளை அக்குடும்பங்களின் 174 இளைஞர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்கென சிறீலங்காவின் விசேட அதிரடிப்படையினரால் அழைத்துச் செல்லப்பட்டனர். 20 வருடங்களாகியும் இவர்கள் இன்றுவரை விடுதலை செய்யப்படவில்லை. இவர்கள் சித்திரவதை செய்தபின்னர் கொல்லப்பட்டனர் என அறியப்படுகின்றது. இச்சம்பவத்தின் நினைவாக இருபது ஆண்டு நிறைவு கடந்த ஞாயிற்றுக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.*

*செப்டெம்பர் 5ம் திகதி 158 பேரும் 23ம் திகதி 16 பேரும் அதிரடிப்படயினரால் பேருந்துகளில் ஏற்றிக் கொண்டு செல்லப்பட்டனர். இவர்கள் கொல்லப்பட்டதாக கருதப்படுகின்ற போதிலும் தமது பிள்ளைகள் இன்றும் உயிருடன் இருக்கிறார்கள்? மீண்டும் வீட்டுக்கு வருவார்கள் என நினைத்து ஏற்கிக்கொண்டிருக்கின்றனர். தமது பிள்ளைகள் எங்கையாவது சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டிருக்கலாம் என நம்புகின்ற பெற்றோர்களும் இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள். இந்நிலையில், படையினரால் அழைத்துச் செல்லப்பட்டு காணாமல் போனதாகக் கூறப்படும் 174 பேரின் 20வது ஆண்டு நினைவு கூறும் வகையில் அப்பிரதேசத்திலுள்ள மத வழிபாட்டு தலங்களில் விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றன. வந்தாறுமூலையிலுள்ள கிழக்கு பல்கலைக்கழக வளாக பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்ற பூஜை வழிபாட்டில் காணாமல் போனவர்களின் உறவினர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையிலான பொது மக்கள் கலந்து கொண்டார்கள்.*

*இவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைக்கான நீதியை எங்கே தேடுவது..? கொல்லப்பட்ட எம் மக்களுக்கு நீதி கேட்க நாம் என்ன செய்கின்றோம்...? இந்த அழிவுக்கு நியாயம் வேண்டாமா..? உலகத்தின் கதவுகளை ஓங்கித் தட்டுங்கள். இவர்களுக்கான*

## நீதியைக் கேளுங்கள்!